

# நட்சத்திரப் பேரரசி

(Sitara-e-Qaisarah)

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)
வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

# நட்சத்திரப் பேராசி

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)
வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

வெளியிடுவோர்:
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான்
குர்தாஸ்பூர், பஞ்சாப் – 143 516


Tamil Translation of the Urdu Book

# Sitara-e-Qaisarah

# நட்சத்திரப் பேரரசி


| | | |
|---|---|---|
| Written by | : | Hazrat Mirza Ghulam Ahmad[as]<br>(Promissed Messiah & Mahdi) |
| Translated by | : | J.S. Saleem Ahmad |
| Composed by | : | A. Abdul Nizar |
| Year | : | 2022 |
| Copies | : | 500 |
| Published by | : | Nazarat Nashr-o- Isha'at<br>Qadian - 143 516<br>Gurdaspur<br>Punjab, India |
| Printed at | : | Fazl-e-Umar Printing Press<br>Gurdaspur, Qadian - 143 516<br>Punjab |

Noorul Islam Toll Free No : 1800 103 2131
Tamil Toll Free No : 1800 425 40000



ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)
வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

# நூலாசிரியரைப் பற்றி...

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் 1835 –ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள காதியான் எனும் சிற்றூரில் பிறந்தார்கள். தமது சிறு வயதிலிருந்தே இறை வணக்கத்திலும், பிரார்த்தனையிலும், திருக்குர்ஆன், பிற மத வேதங்களைக் கற்பதிலும் அன்னார் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அனைத்து திசைகளிலிருந்தும் தாக்குதலுக்கு உள்ளாகும் இஸ்லாத்தின் பரிதாப நிலையைக் கண்டு, அன்னார் மிகவும் வேதனை அடைந்தார்கள். இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காகவும், அதன் போதனைகளை தூய, பரிசுத்த வடிவில் வழங்குவதற்காகவும், அன்னார் தொண்ணூறுக்கும் மேற்பட்ட புத்தகங்களையும், ஆயிரக்கணக்கான கடிதங்களையும் எழுதியதுடன், ஏராளமான மார்க்க விவாதங்களிலும் பங்கேற்றார்கள். நல்லொழுக்க, ஆன்மீக முழுமைத் தன்மையை அடையும் பொருட்டு, மனிதனுக்கு இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்தும் ஓர் உயிருள்ள மார்க்கமாக இஸ்லாம் திகழ்கிறது என அன்னார் வாதித்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு, இளமைப் பருவத்திலிருந்தே இறைவன் புறமிருந்து கனவுகள், ஆன்மீகக் காட்சிகள், இறை வெளிப்பாடுகள், முன்னறிவிப்புகள் வரத் தொடங்கின. 1889 –ல் இறை கட்டளையின்படி அன்னார் பைஅத் வாங்கத் தொடங்கினார்கள். ஒரு தூய ஜமாஅத்திற்கான அடித்தளமிட்டார்கள். பின்னர் இறை வெளிப்பாடுகள் அதிகமாக வரத் துவங்கின. மேலும், பல்வேறு மார்க்கங்களில், வெவ்வேறு பெயர்களில் முன்னறிவிக்கப்பட்ட இறுதிக் காலத்தின் சீர்திருத்தவாதி தாமே என்று இறை கட்டளைக்கு இணங்க அன்னார் அறிவித்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

தாமே என்றும் அன்னார் வாதித்தார்கள். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தற்போது இருநூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் நிறுவப்பட்டுள்ளது.

1908 –ஆம் ஆண்டில் அன்னாரது மறைவுக்குப் பின்னர், திருக்குர்ஆன், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கிணங்க அன்னாரின் வருகையின் நோக்கத்தை முழுமைப்படுத்தும் பொருட்டு, கிலாஃபத் அமைப்பு (கலீஃபாவை நியமித்தல்) நிறுவப்பட்டது. ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஐந்தாவது கலீஃபாவாகவும், உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய தலைவராகவும் இருந்து வருகின்றார்கள்.

# பதிப்புரை

*வாக்களிக்கப்பட்ட மஸீஹும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய 'சிதாரயே கய்ஸரா' (நட்சத்திரப் பேரரசி) என்ற நூலை மதிப்பிற்குரிய* **J.S. சலீம் அஹ்மது சாஹிப்** *அவர்கள் (சத்ர் புத்தக ரிவியூ கமிட்டி, தமிழ்நாடு) தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள்.*

*இதை, சரிபார்ப்புக் குழு உறுப்பினர்களான மதிப்பிற்குரிய* **S.S.H. முஹம்மது லெப்பை சாஹிப்** *அவர்களும் முஅல்லிம்* **M. ஷாஜஹான் சாஹிப்** *அவர்களும், மவ்லவி* **O.M. முஸ்ஸம்மில் அஹ்மது சாஹிப்** *அவர்களும் மூல நூலுடன் சரிபார்த்து திருத்தங்களை செய்துள்ளார்கள்.*

*அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மேலான வெகுமதியை வழங்குவானாக! ஆமீன்.*

*வஸ்ஸலாம்*

*எளியவன்*
**ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்**
*நாஸிர் நஷ்ரோ இஷாஅத்*
*காதியான்*

இந்த நூலில் மகத்துவமிக்க பேரரசி (தாம் இக்பாலஹா – அவருடைய செல்வாக்கு நிரந்தரமாக இருக்கட்டுமாக) அவர்களின் பேருதவிகளைப் பற்றிய குறிப்பு உள்ளது. மேலும் பேரரசி அவர்களின் நீதியான ஆட்சிக் காலத்தில் நட்சத்திரமாய் ஒளிரும் அவர்களின் செல்வாக்கினால் பூமியின், வானத்தின் பலவிதமான அருள்கள் வெளிப்பட்டதைப் பற்றிய குறிப்பு உள்ளது. இது அச்சாகி இந்த காரணங்களினாலேயே இதற்கு 'சிதாரயே கய்ஸரா' (நட்சத்திரப் பேரரசி) என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நூல் காதியானிலுள்ள ஸியாவுல் இஸ்லாம் அச்சகத்தில் அச்சகத்தாரராகிய ஹகீம் ஃபஸ்ல் தீன் அவர்களின் ஏற்பாட்டுடன் அச்சிடப்பட்டு 24, ஆகஸ்டு 1899 அன்று வெளியிடப்பட்டது.

# இந்தியா, இங்கிலாந்து நாட்டின் மாட்சிமைமிகு பேரரசி, கம்பீரமிக்க மகாராணி அவர்களுக்கு அல்லாஹ் அவர்களது வளமான செல்வாக்கை நீடிக்கச் செய்வானாக!

முதலாவதாக, சர்வ வல்லமைமிக்க இறைவன், மாட்சிமைமிகு நமது இந்திய மகாராணி அவர்களின் வாழ்நாளில் பேரருள் புரியவும், அவர்களது செல்வாக்கிலும், அந்தஸ்திலும், கவுரவத்திலும் முன்னேற்றத்தை வழங்கவும், அவர்களது அன்பிற்குரியவர்களுக்கும், அவர்களது மகன்களுக்கும் பாதுகாப்பை வழங்குவதன் மூலம் அவர்களது கண்களை குளிர்ச்சியாக வைக்கவும் நான் பிரார்த்திக்கின்றேன்.

இதற்குப் பிறகு, பஞ்சாபில் குர்தாஸ்பூர் மாவட்டத்தில் லாகூரிலிருந்து சுமார் எழுபது மைல் தொலைவில் வடகிழக்கு கோடியில் அமைந்துள்ள ஒரு சிறு கிராமமாகிய காதியானில் வாழ்ந்து வரும் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி எனும் இதை சமர்ப்பிக்கின்ற எழுத்தாளனாகிய நான் கூறிக்கொள்வது என்னவெனில், இந்நாட்டில் வாழ்ந்து வரும் அனைவரும் மாட்சிமைமிகு மகாராணி அவர்களிடமிருந்து நடுநிலையுணர்வு, தனது மக்களை பராமரித்தல், நீதியை நிலைநாட்டுதல் ஆகியவற்றை மன மகிழ்ச்சியுடன் அனுபவித்து வருகின்றனர். மேலும் அளப்பரிய பெருந்தன்மையுடன் கோடிக்கணக்கான பொருட்செலவில் சமூகத்தில் அனைத்து தரப்பிலுள்ள தனது மக்களின் நலனுக்காக நல்ல பல திட்டங்களையும், அமைதிக் கொள்கைகளையும் அவர்கள் உருவாக்கியதும் இதற்கு

காரணமாகும். மாட்சிமைமிகு மகாராணி (தாம இக்பாலஹா – அவர்களின் செல்வாக்கு நீடிக்கட்டுமாக) அவர்கள் மீது தத்தமது கண்ணோட்டம், கூர்நோக்கு சிந்தனை, நன்றியுடைமை, ஆகியவற்றின் தனது தரத்திற்கேற்ப அன்பையும், உண்மையான கட்டுப்படுதலையும் மக்கள் வைத்துள்ளனர். காட்டுவாசிகளைப் போன்றும் விலங்குளைப் போன்றும் மறைந்து வாழ்கின்ற குறைந்த எண்ணிக்கையிலான சில மக்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

ஆனால், நான் எனது 'துஹ்ஃபயே கைசரிய்யா' (மகாராணிக்கு ஓர் அன்பளிப்பு) என்ற புத்தகத்தில், ஏற்கனவே தெளிவாகக் கூறியிருப்பது போன்று, இந்த மேலான அரசின் மீது நாம் கொண்டுள்ள புரிதல், அறிவு ஆகியவற்றின் காரணமாக, இந்த எளியவன் எந்த அளவுக்கு இந்த மாட்சிமைமிகு மகாராணி அவர்கள் மீதும், அவர்களது அதிகாரிகள் மீதும் கலப்பற்ற தன்மை, நேசம், கட்டுப்படுதல் ஆகியவற்றின் தரத்தை கைக்கொண்டுள்ளான் என்றால், அதன் உண்மைத்தன்மை குறித்து விவரிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை. இந்த உண்மையான அன்பு மற்றும் கலப்பற்ற தன்மையின் தூண்டுதலினால்தான், அறுபதாண்டு நிறைவு விழா கொண்டாட்டத்தையொட்டி, நான் மாட்சிமைமிகு மகாராணி (அவர்களின் செல்வாக்கு நீடிக்கட்டுமாக) அவர்களுக்கு 'துஹ்ஃபயே கைசரிய்யா' (மகாராணிக்கு ஓர் அன்பளிப்பு) என்ற புத்தகத்தை எழுதி, ஓர் எளிய அன்பளிப்பாக அதை நான் கண்ணியத்திற்குரிய மகாராணி அவர்களுக்கு அனுப்பினேன்.

மேலும், இதற்காக அவர்கள் பதில் அனுப்பி என்னைக் கவுரவிப்பார்கள் என்றும், அது எனக்கு எனது எதிர்பார்ப்பை விட அதிகமான பெருமகிழ்ச்சியின் ஊற்றாக விளங்கும் என்றும் நான் உறுதியாக நம்பினேன். மேலும் எனது இந்த நம்பிக்கைக்கும், நிச்சய உறுதிக்கும் அடிப்படை, அனைத்து கிழக்கத்திய நாடுகளிலும் பிரசித்திப் பெற்று விளங்கும் மாட்சிமைமிகு இந்திய மகாராணியின் உயர்தரமான நற்பண்புகளே ஆகும். அவர்களது மாட்சிமைமிகு ஆட்சியைப் போன்றே, பரந்து விரிந்த அவர்களது நற்குணங்களின் அளவு, உணர்வு ஆகியவற்றுக்கான ஒப்புமை வேறெங்கும் காண முடியாத அளவு ஈடிணையற்றவையாகத் திகழ்கின்றன. எனினும், அரசிடமிருந்து ஒரு வார்த்தை கூட, எனக்கு பதில் கிடைக்கவில்லை என்பதை எண்ணி பெரிதும் வியப்படைகிறேன். எப்படியிருப்பினும், என்னுடைய அந்த எளிய அன்பளிப்பான 'துஹ்ஃபயே கைசரிய்யா' (மகாராணிக்கு ஓர் அன்பளிப்பு) என்ற புத்தகம் மாட்சிமைமிகு மகாராணி அவர்களுக்கு வழங்கப் பட்டிருந்தும், எனக்கு பதில் அளிக்கப்படாமல் இருக்கிறது என்பதை எனது மனசாட்சி ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது. நிச்சயமாக, இதைப் பற்றி மாட்சிமைமிகு மகாராணி (அவர்களின் செல்வாக்கு நீடிக்கட்டுமாக) அவர்களின் எண்ணம், விருப்பம், அறிந்திருத்தல் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு வேறு சில காரணங்கள் இருக்கக்கூடும்.

எனவே, அரசின் அங்கீகரிக்கப்பட்ட சில வார்த்தைகளைப் பெறுவதால் நான் மகிழ்ச்சியடையக் கூடும் என்பதற்காக, மாட்சிமைமிகு மகாராணி மீது நான் கொண்டுள்ள நல்லெண்ணம்,

இந்த எளிய அன்பளிப்பாகிய 'துஹ்ஃபயே கைசரிய்யா' (மகாராணிக்கு ஓர் அன்பளிப்பு) என்ற புத்தகத்தின் பக்கம் அன்னாருக்கு கவனமூட்டுவதற்காகவும், மகாராணியின் ஒப்புதலின் சில சொற்களை மகிழ்ச்சியுடன் நான் பெறுவதற்–காகவும் மீண்டும் ஒருமுறை என்னை கட்டாயப்படுத்தியது. **இந்த நோக்கத்திற்காகவே நான் இதனை சமர்ப்பிக்கின்றேன்.** நான் இங்கு கவுரவத்திற்குரிய இந்தியாவின் பேரரசி மாட்சிமைமிகு மகாராணி (அவர்களின் செல்வாக்கு நீடிக்கட்டுமாக.) அவர்களுக்கு சில வார்த்தைகளைச் சமர்ப்பிக்கத் துணிகிறேன். நான் பஞ்சாபில் தலைசிறந்த ஒரு முகலாய குடும்பத்தைச் சேர்ந்தவன் ஆவேன். சீக்கிய ஆட்சிக்கு முன்பு, எனது மூதாதையர்கள் மாநிலத்தை தன்னாட்சி செய்து வந்த ஆட்சியாளர்கள் ஆவர். எனது முப்பாட்டனார் ***மிர்ஸா குல் முஹம்மது சாஹிப்*** அவர்கள் ஆளுமைத் திறமையுடன் ஞானமிக்க, மதிநுட்பமுடைய, வீரமிக்க, நற்குணங்களுடைய நாட்டுப்பற்றுள்ள மனிதராக இருந்தார்கள். எனவே, திறமை–யின்மை, ஆடம்பரம், சோம்பேறித்தனம், மன உறுதியின்மை ஆகியவற்றின் காரணமாக தில்லியில் சுகாதி அரசர்கள் பலவீனமடைந்து வீழ்ச்சியை நோக்கிச் சென்றபோது, சில மந்திரிகள் எனது முப்பாட்டனாரை தில்லியின் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்த பெரும் முயற்சிகள் மேற்கொண்டனர். அன்னார் மக்கள் தொண்டிலும், புத்திக் கூர்மையிலும் சிறந்து விளங்கியதுடன் நற்குணங்கள் அனைத்தும் உடையவராகவும், அரசக் குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் இருந்தார்கள்.

ஆனால், சுகாதி அரசர்களின் ஆட்சியும், ஆயுளின் கோப்பை நிரம்பியும் விட்டபடியால், இந்தத் திட்டம் பொதுவான ஒப்புதலைப் பெறவில்லை. பின்னர் சீக்கியர்களின் ஆட்சியில் எங்களுக்கு எதிராக எண்ணற்ற கொடுமைகள் இழைக்கப்பட்டன. மாநிலத்தின் அனைத்து கிராமங்களை விட்டும் எங்களது முன்னோர்கள் வெளியேற்றப்பட்டனர். ஒரு நொடிப்பொழுது கூட அமைதியாகக் கழியவில்லை. ஆங்கிலேய அரசாங்கத்தின் அருளுக்குரிய காலடி வருவதற்கு முன்பே எங்களது முழு ஆட்சியும் மண்ணோடு மண்ணாகி விட்டது. வெறும் ஐந்து கிராமங்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. சீக்கியர்களின் ஆட்சியின்போது பெரும் துன்பங்களைச் சந்தித்து வந்த எனது தந்தை மர்ஹூம் மிர்ஸா குலாம் முர்தஸா அவர்கள், கடுமையாக தாகித்திருக்கும் ஒரு மனிதர் தண்ணீருக்காக ஆவலோடு காத்திருப்பதைப் போன்று ஆங்கிலேய ஆட்சி மலர்வதற்காகக் காத்திருந்தார்கள். பிறகு, ஆங்கிலேய அரசு இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அந்த அருளினால் அவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள். அதாவது, ஆங்கிலேய ஆட்சி இந்நாட்டில் ஏற்படுவது, அன்னாருக்கு விலைமதிக்க முடியாத ஒரு கருவூலத்தைக் கண்டெடுத்தது போல் இருந்தது. அவர் ஆங்கில அரசின் பெரும் நலன் விரும்பியாகவும், அர்ப்பணிப்பு மிக்க தொண்டராகவும் இருந்தார்கள். இதன் காரணமாகவே, அவர்கள் 1857 –ஆம் ஆண்டு நடந்த கலகத்தின்போது ஆங்கிலேய அரசின் உதவிக்காக வீரர்களுடன் கூடிய ஐம்பது குதிரைகளை வழங்கினார்கள். அதன் பிறகும் கூட, எப்போது அரசுக்கு உதவி தேவைப்பட்டாலும், உள்ளத்தாலும் உயிராலும் அதைச் செய்வதற்காக அவர்கள்

ஆயத்தமாக இருந்து வந்தார்கள். 1857–ஆம் ஆண்டு நடந்த கலகம் கொஞ்சம் தொடர்ந்திருந்தாலும், கூடுதலாக நூறு காலாற்படை வீரர்களை வழங்கி அரசுக்கு உதவிட அவர்கள் ஆயத்தமாய் இருந்தார்கள்.

சுருங்கக்கூறின், இந்த விதத்தில்தான் அவர்களது வாழ்நாட்கள் கழிந்தன. அன்னாரது மரணத்திற்குப் பிறகு, இந்த எளியவன் உலக வேலைகளிலிருந்து முற்றிலும் தன்னை விடுவித்து, மேலான இறைவனுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டேன். ஆங்கிலேயே அரசை ஆதரித்து நான் செய்த தொண்டு என்னவெனில், சுமார் ஐம்பதாயிரம் புத்தகங்கள், பத்திரிகைகள், பிரசுரங்களை அச்சிட்டு, இந்த நாடு முழுவதும் மட்டுமின்றி பிற இஸ்லாமிய நாடுகளிலும் விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்தேன். இவ்வனைத்து வெளியீடுகளும், ஆங்கிலேய அரசு முஸ்லிம்களாகிய நமக்கு நலன் விரும்பிகளாக இருக்கின்றது. எனவே, இந்த அரசுக்கு உண்மையான முறையில் கட்டுப்பட்டவர்களாக இருப்பதும், இந்த நல்ல சூழல் உருவானதற்கு முழு நன்றிக்கடன் பட்டோராய் திகழ்வதும், இந்த அரசுக்காக தொடர்ந்து துஆ செய்வதும் ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும் என்ற பொருள்பட வெளியிடப்பட்டன. நான் இந்தப் புத்தகங்களை உருது, ஃபார்ஸி, அரபி என பல்வேறு மொழிகளில் எழுதி, இஸ்லாமிய உலகு முழுவதும் எந்த அளவு விநியோகம் செய்தேன் என்றால், இவை இஸ்லாத்தின் இரு புனித நகரங்களான மக்கா, மதீனா நெடுகிலும் பரவலாக வெளியிடப்பட்டன. மேலும், அவை பைசான்டைன் (ரோம்) பேரரசின் தலைநகரான கான்ஸ்டான்டின்

நோபிளிலும், சிரியா, எகிப்து ஆகிய நாடுகளிலும், ஆப்கானிஸ்தானின் காபூல் மற்றும் பிற நகரங்களிலும் இயன்றவரை விநியோகம் செய்யப்பட்டன.

இதன் விளைவாக, அறிவீனமான முல்லாக்களின் போதனைகளினால், இலட்சக்கணக்கான மக்களின் உள்ளங்களில் வேரூன்றியிருந்த ஜிஹாது குறித்த தவறான எண்ணத்தை அவர்கள் கைவிட்டனர். என் மூலம் நிகழ்ந்திருக்கும் இந்தச் சேவையைப் போன்று, இந்த பிரிட்டிஷ் இந்தியாவில் வேறு எந்த முஸ்லிமும் செய்து காட்ட முடியவில்லை என்ற உண்மையான நிகழ்வில் நான் பெருமிதம் அடைகிறேன். இந்த இருபத்தி இரண்டு ஆண்டு கால எனது சேவையை, இந்த கருணைமிக்க அரசிற்கு செய்யும் பேருதவியாக நான் நினைக்கவில்லை. மாறாக, இந்த அரசின் வருகையால் நாங்களும், எங்களது முன்னோர்களும் பற்றி எரியும் இரும்பு உலைக் களத்திலிருந்து விடுபட்டோம் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இந்த காரணத்திற்காகத் தான் நான் எனது அன்பிற்குரியவர்களுடன் இணைந்து, எனது இரு கைகளையும் உயர்த்தி பிரார்த்திக்கிறேன். இறைவா! அருளுக்குரிய இந்த இந்தியப் பேரரசியை (அவருடைய ஆட்சி நீடிக்கட்டுமாக) நீண்ட காலம் எங்கள் தலை மீது சாந்தியுடையதாக வைப்பாயாக. மேலும் அவருடைய ஒவ்வொரு காலடியுடனும் உனது உதவி எனும் நிழல் இருக்கட்டுமாக. மேலும் அவருடைய செல்வாக்குள்ள நாட்களை மிகவும் நீண்டதாக்குவாயாக.

மாட்சிமைமிகு இந்தியாவின் பேரரசி அவர்களுக்கு நான் அனுப்பி இருந்த "துஹ்ஃபயே கைசரிய்யா" (மகாராணிக்கு ஓர்

அன்பளிப்பு) என்ற புத்தகத்தில் இத்தகைய நிலைமைகளையும், சேவைகளையும், துஆக்களையுமே சமர்ப்பித்திருந்தேன். மாட்சிமைமிகு மகாராணி அவர்களின் பரந்த நற்பண்புகளையும் கருத்தில் கொண்டு, நான் அவர்களிடமிருந்து பதிலைப் பெறுவதற்காக ஒவ்வொரு நாளும் நம்பிக்கையோடு இருந்தேன். அந்த நம்பிக்கையில் நான் இன்னும் நிலைத்திருக்கிறேன். உச்சகட்ட ஈடுபாட்டுடன் உள்ளத்தின் இரத்தத்தால் எழுதப்பட்ட என்னைப் போன்ற நலன் விரும்பி ஒருவரின் எளிய அன்பளிப்பு (புத்தகம்), மாட்சிமைமிகு இந்திய மகாராணி அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால், அதற்கு பதில் வராமல் இருப்பது என்பது என் பார்வையில் சாத்தியமில்லாத ஒன்றாகும் என நான் நம்புகின்றேன். மாறாக, நிச்சயமாகப் பதில் வந்திருக்க வேண்டும்; நிச்சயமாகப் பதில் வந்திருக்க வேண்டும். எனவே, இந்திய பேரரசியின் அருளுக்குரிய நற்குணங்கள் மீது நாம் வைத்திருக்கும் உறுதியான முழுமையான நம்பிக்கையின் காரணமாக, இந்த சமர்ப்பித்தலை ஒரு நினைவூட்டலுக்காக எழுதும் கட்டாயத்தில் நான் இருக்கின்றேன். இந்த சமர்ப்பித்தலை எனது கைகள் மட்டும் எழுதவில்லை. எனது உள்ளம் உறுதித் தன்மையால் நிரம்பிய அழுத்தத்தைக் கொடுத்து இந்த நல்லெண்ணம் கொண்ட கடிதத்தை எழுதுவதற்காக எனது கைகளை இயக்கியது. அமைதி, பாதுகாப்பு, மகிழ்ச்சி நிறைந்த ஒரு தருணத்தில், இந்தக் கடிதம் மாட்சிமைமிகு இந்தியப் பேரரசியை (அவர்களது வளமான வாழ்வு நீடிக்கட்டுமாக!) சென்றடையச் செய்ய வேண்டும் என நான் மேலான இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன். மேலும் இறைவன் மாட்சிமைமிகு மகாராணி

அவர்களைக் குறித்து எனது உள்ளத்தில் காணப்படும் உண்மையான அன்பையும், உண்மையான பற்றுறுதியையும் அன்னார் தமது தூய உள்ளுணர்வுடன் அறிந்து கொள்ளும் பொருட்டு அன்னாருடைய உள்ளத்தில் இறையறிவிப்பு செய்வானாக! அவர்களின் கருணைமிக்க நற்குணத்தின் காரணமாக எனக்கு அன்பான பதிலை அளிக்கச் செய்வானாக! பூமியிலும், அனைத்து உலகக் காரியங்களிலும் மேன்மைக்குரிய இறைவன் அவனது முழுமையான கருணையுடனும், முழுமையான ஞானத்துடனும் அவன் உலகை நீதி, அமைதியைக் கொண்டு நிரப்புவதற்காக மாட்சிமைமிகு மகாராணியின் ஆட்சியை இந்நாட்டிலும் அயல் நாடுகளிலும் ஏற்படுத்தியுள்ளதைப் போன்று, குழப்பத்தை நீக்கி, தார்மீக நல்லொழுக்கத்தை சீர்திருத்தி, மிருகத்தனமான நிலைமைகளை அகற்றி, நீதி, அமைதி, மனித நலம் ஆகியவற்றை மேம்படுத்தும் வண்ணம் இந்தியப் பேரரசி மாண்புமிகு மகாராணியின் மனப்பூர்வமான குறிக்கோள்களை நிறைவேற்றவும், அதற்கு உதவிடவும், அவன் தன் சார்பாகவும், மறைவானவற்றிலிருந்தும், வானிலிருந்தும் மகாராணி அவர்களின் ஆட்சியில் ஓர் ஆன்மீக ஒழுங்குமுறையை ஏற்படுத்த அவன் நாடியுள்ளான் என்ற நற்செய்தியை இந்தியாவின் கம்பீரமிக்க மகாராணி – மாட்சிமைமிகு பேரரசி அவர்களிடம் தெரிவிக்கவும் இறைவன் என்னை அனுப்பியுள்ளான்.

தாங்கள் வளர்க்க விரும்பும் அமைதி, பாதுகாப்பு, சமாதானம் எனும் தோட்டத்திற்கு விண்ணிலிருந்து தண்ணீர் இறைத்து அதற்கு உதவிட நாடியுள்ளான். வாக்களிக்கப்பட்ட

மஸீஹின் வருகை தொடர்பான அவனது தொன்மையான வாக்குறுதியின்படி, மாட்சிமைமிகு பேரரசி அவர்களது நல்ல, அருளுக்குரிய குறிக்கோள்களில் நான் அவர்களுக்கு உதவி செய்வதில் என்னை ஈடுபடுத்திக் கொள்வதற்காக, பெத்லஹேமில் பிறந்து, நாசரேத்தில் வளர்ந்த அந்த இறை வீரரின் தன்மையில் அவன் என்னை விண்ணிலிருந்து அனுப்பியுள்ளான். இறைவன் என்னை எண்ணற்ற அருட்களால் நீராட்டியுள்ளான். மாட்சிமை மிகு மகாராணியின் தூய குறிக்கோள்களுக்கு விண்ணிலிருந்து அவனே உதவிட என்னை அவனது மஸீஹ் ஆக நியமித்துள்ளான்.

அருளுக்குரிய பேரரசியே! இறைவன் உங்களை பாதுகாப்பில் வைப்பானாக! உங்களுக்கு நீண்ட ஆயுளையும், வளமான செல்வாக்கையும், வெற்றியையும் வழங்குவதன் மூலம் எமது இதயத்திற்கு மகிழ்வூட்டுவானாக! உண்மையின் ஒளியால் நிறைந்துள்ள உங்களுடைய ஆட்சிக் காலத்தில், வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகை என்பது அமைதியின் மீதிருக்கின்ற உங்களது அன்பு, நல்லாட்சி, உங்கள் குடிமக்கள் மீது நீங்கள் காட்டும் அனுதாபம், நீதி மற்றும் அரவணைப்பு ஆகியவற்றில் நீங்கள் மற்ற அனைத்து ஆட்சியாளர்களையும் விஞ்சிவிடுகிறீர்கள் என்பதற்கு இறைவன் புறமிருந்துள்ள ஒரு சாட்சியாகும். முஸ்லிம்களும் கிறித்தவர்களும் வரவிருக்கின்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையை நம்புகின்றனர். ஆனால் ஓநாயும், ஆடும் ஒரே நீரோடையிலிருந்து நீர் அருந்துகின்ற, நச்சுப் பாம்புடன் குழந்தைகள் விளையாடுகின்ற ஒரு காலகட்டத்தில் அவர் தோன்றுவார் என்று அவர்கள் கூறுகின்றனர்.

எனவே, மேன்மைக்குரிய பேரரசியே! இது உங்களுடைய காலத்தையும், உங்களுடைய ஆட்சியையுமே குறிப்பிடுகின்றது. கண்ணுள்ளோர் கண்டு கொள்ளட்டும். காழ்ப்புணர்ச்சியைக் களைந்தோர் புரிந்து கொள்ளட்டும். மாட்சிமைமிகு மகாராணி அவர்களே! கொடிய விலங்குகளும், சாதுவான பறவைகளும் ஒரே இடத்தில் ஒன்றுகூடியது உங்களுடைய ஆட்சியில்தான். குழந்தைகளைப் போன்ற நேர்மையானவர்கள் விஷமிக்க பாம்புகளுடன் விளையாடுகின்றனர். அவர்களுக்கு உங்களுடைய அமைதி நிறைந்த நிழலின் கீழ் எவ்வித அச்சமும் இல்லை. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுகின்ற உங்களது ஆட்சியை விட வேறெந்த ஆட்சி அமைதி நிறைந்ததாக இருக்க முடியும்?

மேன்மைமிகு பேரரசியே! உங்களது தூய குறிக்கோள்கள் விண்ணின் உதவியை தம் பக்கம் ஈர்க்கின்றன. உங்களது நல்லெண்ணத்தின் ஈர்ப்புத் திறனால் விண்ணுலகம் பூமியை நோக்கி கருணையோடு குனிந்து கொண்டே செல்கிறது. எனவே, வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகை நிகழ நீங்கள் ஆட்சி புரியும் காலத்தை விட பொருத்தமான காலம் வேறெதுவுமில்லை. எனவே ஒளி வீசிப் பிரகாசிக்கும் உங்களது ஆட்சிக் காலத்தில், இறைவன் விண்ணிலிருந்து ஓர் ஒளியை இறக்கியுள்ளான். ஏனெனில், ஒளி, ஒளியை தன் பக்கம் ஈர்க்கின்றது; இருள், இருளை தன் பக்கம் ஈர்க்கின்றது.

மேன்மைக்குரிய செல்வாக்கைக் கொண்ட இக்காலத்தின் அரசியாரே! வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையைக் குறித்து எந்த நூல்களில் கூறப்பட்டுள்ளதோ அவற்றில் தெளிவாக

உங்களது அமைதியான ஆட்சியைக் குறித்தும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. எலியா நபி (இல்யாஸ் நபி) யோவான் ஸ்னானனின் பண்பில் வந்ததைப் போன்று, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உலகில் வருவது அவசியமாக இருந்தது. அதாவது, யோவானே தனது பண்பிலும் இயல்பிலும் இறைவன் பார்வையில் எலியா ஆகி விட்டார். இப்போதும் நடந்தது என்னவென்றால், உங்களுடைய அருளுக்குரிய ஆட்சியில் ஒரு மனிதர் இயேசுவாகிய ஈஸா நபி (அலை) அவர்களின் பண்பையும், இயல்பையும் கொண்டவராக ஆக்கப்பட்டார். எனவேதான், அவருக்கு மஸீஹ் எனும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அவரது வருகை நிச்சயமாக நடந்தே தீரும். ஏனென்றால், இறைவனின் தூய வேதங்களில் கூறப்பட்டவை பொய்ப்பதற்கு சாத்தியமில்லை.

மாட்சிமைமிகு மகாராணி அவர்களே! குடிமக்கள் அனைவரின் பெருமைக்கு உரியவரே! காலத்தின் ஆட்சியாளர் தனது மக்களின் நலனில் ஆர்வமும், நல்லெண்ணமும் உடையவராக இருந்தால் – தனது ஆற்றலையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி, பொதுமக்களின் நலனுக்காகவும், அமைதிக்காகவும் ஒரு முழுமையான ஆட்சிமுறையை ஏற்படுத்தியிருந்தால் – பொது மக்களிடையே நல்லொழுக்க மாற்றங்களை கொண்டு வருவதற்கான வேதனை அவரது உள்ளத்தில் இருந்தால் அவரது உதவிக்காக இறைவனின் கருணை வானத்தில் பொங்கி எழுவது தொன்றுதொட்டே இருந்து வரும் இறைவனின் நடைமுறையாகும். ஆட்சியாளரின் வீரத்திற்கும், விருப்பத்திற்கும் ஏற்ற வகையில், ஓர் ஆன்மீக மனிதர் இவ்வுலகிற்கு அனுப்பப்படுகிறார். நீதிமானாக

விளங்கும் அந்த ஆட்சியாளரின் பரிசுத்த எண்ணத்தாலும், தைரியத்தாலும், படைப்பினங்கள் மீதான பொது அனுதாபத்தாலும், அப்படிப்பட்ட முழுமையான ஒரு சீர்திருத்தவாதியின் பிறப்பு நிகழ்கிறது. உலகின் இரட்சகராக, ஒரு நீதியான ஆட்சியாளர் பிறக்கும்போது இது நிகழ்கிறது. அவர் தனது அபார வீரத்தாலும், மனித இனத்தின் மீது கொண்டுள்ள அனுதாபத்தாலும், இயல்பாகவே அவருக்கு ஒரு விண்ணின் இரட்சகர் தேவைப்படுகிறார்.

ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் இவ்வாறே நிகழ்ந்தது. ஏனென்றால், அக்கால ரோமானியப் பேரரசர் ஒரு நல்ல மனிதராகத் திகழ்ந்ததுடன், இப்பூமியில் கொடுமைகள் நடப்பதை விரும்பாதவராக இருந்தார். மேலும், அவர் மக்களின் நலனையும், இரட்சிப்பையும் வெளிப்படுத்தினார். அப்போதுதான், ஹீப்ரு மொழியில் ‘நாசரேத்’ என்னும் சொல், குளிர்ச்சியையும், புத்துணர்ச்சியையும், பசுமையையும் குறிப்பிடுவது போன்று, மக்கள் மனங்களிலும் இந்தத் தன்மைகளை உருவாக்குவதற்காக, விண்ணின் இறைவன், நாசரேத் நகரின் மண்ணிலிருந்து ஒளி வீசும் ஒரு சந்திரனை – அதாவது மஸீஹ் ஆகிய ஈஸாவை (இயேசுவை) உதிக்கச் செய்தான்.

நமது அன்பிற்குரிய இந்தியப் பேரரசி அவர்களே! இறைவன் உங்களை நீண்ட காலம் சாந்தியுடன் வைத்தருள்வானாக. நீங்கள் உங்கள் மக்கள் மீது கொண்டுள்ள உங்களது நல்லெண்ண நோக்கமும், நாட்டு மக்களைப் பற்றிய உண்மையான அனுதாபமும், ரோம் நாட்டு மன்னருடன் ஒப்பிடுகையில் அவை குறைந்தவை

அல்ல. இன்னும் கூறுவதென்றால், அவருடைய பண்புகளை விட, உங்களது பண்புகள் மிகவும் உயர்ந்தவையாகும் என நாம் உறுதிபட கூறுகின்றோம். ஏனெனில், உங்களது ஆட்சியில்தான் மாட்சிமைமிகு பேரரசி அவர்களே! எண்ணற்ற ஏழை மக்களோடு கருணையோடு நடந்து கொள்வதைக் காண முடிகிறது. ஒவ்வொரு விஷயத்திலும், எளிய மக்களுக்காகச் செய்யும் நல்ல விஷயங்களில் உங்களின் ஆர்வத்தின் முன்மாதிரியையும், மக்களுக்காகச் செய்யும் உங்கள் அறச்செயலிலும், நாட்டு மக்களைப் பராமரிப்பதிலும் நீங்கள் நிரூபித்துக் காட்டிய முன்மாதிரியையும் போன்றதொரு மிகச் சிறந்த தரத்தையும், நற்பேற்றையும் எந்தவொரு முந்தைய பேரரசர்களிடமும் காண முடியாது. எனவே மாட்சிமைமிகு மகாராணி அவர்கள் தங்களது அனைத்து மக்களின் இரட்சிப்பு, நன்மை, நலனிற்காக இரக்கமுடன் இருப்பதாலும், உங்களுடைய நாட்டு மக்களைப் பராமரிப்பதன் திட்டங்களில் ஈடுபட்டிருப்பதாலும், இவற்றிற்காக விண்ணிலிருந்து இறைவனும் உங்களுக்கு உதவி செய்வான்.

எனவே இவ்வுலகத்தில் இப்போது தோன்றியுள்ள இந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உங்களுடைய உள்ளத்தின் தூய நல்லெண்ணம், உண்மையான அனுதாபம் ஆகியவற்றின் ஒரு வெளிப்பாடேயன்றி வேறில்லை. உங்களுடைய ஆட்சிக்காலத்தில், இறைவன் உலகில் துயருண்ட மக்களை நினைவு கூறி இருக்கின்றான். நீங்கள் உங்கள் அரசாட்சியில் நீதியோடு நடந்து கொள்வது விண்ணகத்தின் நீதியை அதன்பால் ஈர்த்துள்ளது என்பதற்கு ஓர் அத்தாட்சியாக இது அமைந்திருக்கிறது. நீங்கள்

கருணையோடு நடந்து கொள்வது வானத்தில் கருணையை உருவாக்கி இருக்கிறது. எனவே இறைவன் தனது மஸீஹை விண்ணில் இருந்து இங்கு அனுப்பினான். அவர் உங்களது நாட்டில், உங்களது ஆட்சியில் பிறந்துள்ளார். இந்த மஸீஹின் வருகை உண்மைக்கும் பொய்க்கும் இடையேயான வேறுபாட்டை நிரூபிக்கும் உலகத்தின் இறுதித் தீர்ப்பாக இருப்பதால், இந்த காரணத்திற்காகவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்பவர் ஹகம் (நீதி வழங்குபவர்) என்று அழைக்கப்படுகிறார்.

நாசரேத் என்ற சொல் புத்துணர்ச்சி, பசுமையான காலகட்டத்தைக் குறிப்பிடுவது போன்று, இந்த மஸீஹின் கிராமத்தின் பெயர் இஸ்லாம்பூர் காஸி மாஜி என்று வைக்கப்பட்டுள்ளது. இவ்விதத்தில், காஸி என்ற சொல் (நீதி வழங்குபவர்) இறைவனின் இறுதித் தீர்ப்பு வழங்குபவரை குறிப்பதாக இருக்கின்றது. அவரின் மூலமாக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு நிரந்தர அருள் எனும் நற்செய்தி கிடைக்கிறது. மேலும், இதில் ஹகம் (நீதி வழங்குபவர்) ஆகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் பெயரைப் பற்றி நுட்பமான குறிப்பும் உள்ளது. மன்னர் பாபரின் காலத்தில் மாஜ் மண்டலத்தின் பெரும்பாலான பகுதிகள் எங்களது முன்னோர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தபோது, இந்த கிராமம் இஸ்லாம்பூர் காஸி மாஜி எனப் பெயரிடப்பட்டது. நாளடைவில், இந்த ஆட்சி முறை, மாநில சுய ஆட்சி முறையாக மாறியது. மக்கள் வழக்கில் காஸி என்ற சொல் காதி ஆக திரிந்து, நாளடைவில் காதியான் என்று ஆகி விட்டது.

சுருக்கமாக, நாசரேத், இஸ்லாம்பூர் காஸி ஆகிய சொற்கள் மிகவும் பொருள் செறிந்த பெயர்களாகும். அவற்றில் ஒன்று, ஆன்மீக பசுமையையும், மற்றொன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பணியாகிய ஆன்மீக நீதி வழங்குதலையும் குறிப்பிடுகின்றது. மாட்சிமைமிகு இந்தியாவின் பேரரசி அவர்களே! இறைவன் உங்களுக்கு செல்வாக்கு மற்றும் மகிழ்ச்சியுடன் ஆயுள் முழுக்க அருளை வழங்குவானாக. உங்களுடைய ஆட்சிக் காலம் எவ்வளவு அருளுக்குரியது! இறைவனின் கரம் விண்ணிலிருந்து உங்களது குறிக்கோள்களுக்கு ஆதரவளித்துக் கொண்டிருக்கிறது. உங்கள் மக்களின் மீது நீங்கள் கொண்டுள்ள உங்களின் அனுதாபம், உங்களது நல்ல நோக்கங்கள் ஆகியவற்றின் பாதைகளை வானவர்கள் தூய்மைப்படுத்துகின்றனர். ஏங்கித் தவிக்கும் முழு நாட்டையும் வசந்த காலமாக மாற்றும் பொருட்டு, உங்களுடைய நீதி எனும் நுட்பமான நீராவி மேகங்களைப் போன்று எழுகின்றது. உங்கள் ஆட்சியை மதிக்காதவன் தீயவன் ஆவான். உங்கள் பேருதவிகளுக்கு நன்றிகேடு காட்டுபவன் இழிவிற்கு உரியவன் ஆவான். உள்ளங்களுக்கு இடையேயான பிணைப்பு என்பது ஆய்வினால் உண்மை என்று நிரூபிக்கப்பட்ட விஷயமாக இருப்பதால், உங்கள் மீது நான் உண்மையான அன்பு வைத்துள்ளேன் என்பதையும், குறிப்பாக உங்கள் மீது நேசமும், உயர்ந்த மதிப்பும் எனது நெஞ்சத்தில் இருக்கிறது என்பதை நான் என் நாவின் நயத்தால் வெளிப்படுத்த வேண்டியதில்லை. பாய்ந்தோடிக் கொண்டிருக்கும் நீரோட்டத்தைப் போன்று, இரவும் பகலும் இடைவிடாது நாம் உங்களுக்காக பிரார்த்திக்கின்றோம். நாம் உங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பதற்குக் காரணம்

கடுமையான அரசியல் அழுத்தம் அல்ல. மாறாக, உங்களது பலவிதமான நல்ல மேன்மைகள் எமது உள்ளங்களை தன் பக்கம் ஈர்த்து விட்டது.

அருளுக்குரிய இந்தியாவின் மகாராணி அவர்களே! உங்களது மேன்மையும், நற்பெயரும் அருளுக்குரியதாக இருக்கட்டுமாக. உங்கள் மேற்பார்வையில் உள்ள நாடு இறைவனின் மேற்பார்வையில் இருக்கின்றது. எந்த குடிமக்கள் மீது உங்கள் கை இருக்கின்றதோ அவர்கள் மீது இறைவனின் கருணையின் கை இருக்கின்றது. உங்களின் தூய எண்ணங்களின் தூண்டுதலினாலேயே, கட்டுப்பாடு, தூய ஒழுக்கங்கள், சமாதானம் ஆகியவற்றின் வழிகளை மீண்டும் உலகில் நிலைநாட்டுவதற்காக இறைவன் என்னை அனுப்பி இருக்கிறான்.

மாட்சிமைமிகு இந்தியாவின் பேரரசி அவர்களே! முஸ்லிம்களின் ஒரு குறையும், கிறித்தவர்களின் ஒரு குறையும் எத்தகைய முறையில் இருக்கிறதென்றால், அதன் காரணமாக அவர்கள் உண்மையான ஆன்மீக வாழ்விலிருந்து விலகி இருக்கின்றனர் என்று இறைவனிடமிருந்து எனக்கு ஞானம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறை அவர்கள் இருவரையும் ஒன்றிணைய விடுவதில்லை. மாறாக, அது அவர்கள் இருவருக்கிடையே பிரிவினையை உருவாக்குகின்றது. அந்தக் குறை என்னவெனில், முஸ்லிம்கள் கொண்டிருக்கும் மிகவும் அபாயமான, முற்றிலும் தவறான இரு கொள்கைகளாகும். மார்க்கத்திற்காக வாளேந்தி ஜிஹாது செய்வது தம் மார்க்கத்தின்

ஓர் அடிப்படை என அவர்கள் கருதுகிறார்கள். இந்தப் பைத்தியக்காரத்தனத்தினால் ஓர் அப்பாவி மனிதரைக் கொலை செய்வதன் மூலம் அவர்கள் ஒரு பெரிய நற்செயல் செய்து விட்டது போன்று அவர்கள் கருதுகின்றார்கள். இந்தத் தவறான கொள்கை பிரிட்டிஷ் இந்தியாவில் முஸ்லிம்களில் உள்ள பெருவாரியான மக்களிடையே பெருமளவில் சரிசெய்யப்பட்டு விட்டது. இருபத்தி இரண்டு அல்லது இருபத்தி மூன்று ஆண்டு கால எனது முயற்சிகளினால், ஆயிரக்கணக்கான முஸ்லிம்களின் இதயங்கள் தூய்மைப்படுத்தப்பட்டு விட்டன. எனினும், சில வெளிநாடுகளில் இந்த எண்ணங்கள் இன்னும் தீவிரமாகவே இருந்து வருகின்றன என்பதில் சந்தேகமில்லை. இந்த வன்முறையும் பலவந்தமும்தான் இஸ்லாத்தின் சாராம்சமும் அடிப்படையும் என இம்மக்கள் புரிந்துள்ளனர் என்ற அளவில் இருக்கின்றது.

ஆனால், இந்தக் கருத்து ஒருபோதும் சரியானதல்ல. மார்க்கத்தைப் பரப்பும் பொருட்டு வாளேந்தக் கூடாது என திருக்குர்ஆன் தெளிவாகக் கட்டளையிடுகின்றது. மேலும் மார்க்கத்தின் உண்மையான தரமிக்க நல்லியல்புகளை எடுத்து வையுங்கள் எனவும், மாற்றாரையும் நமது நல்லொழுக்க முன்மாதிரிகளால் ஈர்க்க வேண்டும் என்றும் திருக்குர்ஆன் கூறுகின்றது. இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் வாளைப் பயன்படுத்துமாறு கட்டளையிடப்பட்டதாக நினைக்க வேண்டாம். ஏனெனில், அந்த வாள், மார்க்கத்தைப் பரப்புவதற்காகப் பயன்படுத்தப்படவில்லை. இதற்கு முற்றிலும் மாற்றமாக, எதிரிகளின் தாக்குதலிலிருந்து தம்மை தற்காத்துக் கொள்ளவும் அல்லது அமைதியை நிலைநாட்டவுமே வாளேந்தும் நிலை

ஏற்பட்டது. வற்புறுத்தி மார்க்கத்தை ஏற்கச் செய்வது ஒருபோதும் இஸ்லாத்தின் குறிக்கோளாக இருந்ததில்லை. தவறிழைக்கும் முஸ்லிம்களிடம் இந்தக் குறை இன்னமும் இருந்து வருவது வருந்தத்தக்கதாகும். இவர்களின் சீர்திருத்தத்திற்காக, நான் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, விரிவான நூல்களையும், பிரசுரங்களையும் இந்த நாட்டிலும், வெளிநாடுகளிலும் வெளியிட்டிருக்கிறேன். முஸ்லிம்கள் இந்தக் களங்கத்திலிருந்து தூய்மை அடையும் நாள் மிக விரைவில் வரும் என நான் நம்புகின்றேன்.

நமது முஸ்லிம் மக்களிடத்தில் உள்ள இன்னொரு குறை என்னவெனில், உலகை இரத்த வெள்ளத்தால் நிரப்புவார் என்று அவர்கள் கருதிக் கொண்டிருக்கும் ஓர் இரத்தம் சிந்தும் மஹ்தி, இரத்தம் சிந்தும் மஸீஹின் வருகைக்காக அவர்கள் காத்துக் கொண்டிருப்பதாகும். ஆனால் இந்தக் கருத்து முற்றிலும் தவறாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் போரில் ஈடுபடமாட்டார் என்றும், வாளேந்த மாட்டார் என்றும் எங்களது நம்பத்தகுந்த புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளது. மாறாக, அனைத்து அம்சங்களிலும், அவர் ஈஸா – இயேசு (அலை) அவர்களின் உள்ளியல்புகளையும், பண்புகளையும் பெற்றிருப்பார். அவர் எந்த அளவுக்கு அன்னாரது இயல்பை உள்வாங்கியவராகத் திகழ்வார் எனில், வரவிருக்கும் மஸீஹ் ஆனவர், ஈஸா நபி என்றே கருதும் அளவுக்கு மிகப் பொருத்தமாக அவரை ஒத்திருப்பார். இவ்விரண்டு தவறுகளும் இன்றைய கால முஸ்லிம்களிடத்தில் காணப்படுகின்றன. இதன் காரணமாக அவர்களில் பெரும்பாலார்

பிற சமுதாயத்தினர் மீது கடும் வெறுப்பு கொண்டுள்ளனர். இத்தகைய தவறான கொள்கைகளை நீக்குவதற்காகவே இறைவன் என்னை அனுப்பியுள்ளான். இந்த விவகாரங்களில் நான் இந்தத் தீர்ப்பை அளிப்பதற்காகவே, காஸி அல்லது ஹகம் என்ற பட்டம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவர்களோடு ஒப்பிடுகையில், கிறித்தவர்களிடையேயும் ஒரு தவறு காணப்படுகிறது. அதாவது அவர்கள் புனித பைபிளில் ‘ஒளி’ என்றழைக்கப்படும் மஸீஹைப் போன்ற பரிசுத்தமான சான்றோருக்கு ‘சாபம்’ (நவூதுபில்லாஹ் – அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறோம்) என்ற சொல்லைப் பொருத்திப் பார்க்கின்றனர். ‘லஅன்’ (சபித்தல்), ‘லஃனத்’ (சாபம்) ஆகிய சொற்கள் அரபி, ஹீப்ரு ஆகிய இரு மொழிகளிலும் ஒரே மூல மரபுச் சொற்களாகும் என்பதை இவர்கள் புரிந்து கொள்வதில்லை. இறைவனுக்குக் கட்டுப்படாமல் இறைவனை விட்டும் பிரிந்து நெடுந்தூரம் விலகிச் சென்றுவிட்ட சபிக்கப்பட்ட ஒருவனது உள்ளம், தொழுநோயால் அழுகிக் கெட்டுப் போய்விட்ட உடலைப் போன்று அசுத்தமாகவும், அருவெறுக்கத்தக்கதாகவும் ஆகிவிடும் என்பதையே இந்த சொல் உணர்த்துகின்றது. ஒருவரது உள்ளம் நேசம், புரிதல், கட்டுப்படுதல் ஆகியவற்றில் இறைவனுடன் உள்ள அனைத்து தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டு, ஷய்த்தானின் சந்ததியாக மாறிவிடும் அளவுக்கு ஷய்த்தானின் அடிபணிந்தவராக மாறிவிடும் போதுதான் ஒருவர் ‘மல்வூன்’ அல்லது ‘லஃனத்தி’ (அதாவது சபிக்கப்பட்டவர்) என்று அழைக்கப்படுவார் என்ற கருத்தில் அரபி மற்றும் ஹீப்ரு

மொழியியல் வல்லுனர்கள் ஒன்றுபட்ட கருத்து கொண்டுள்ளனர். இறைவன் அவர் மீது வெறுப்படைகின்றான்; அவர் இறைவன் மீது வெறுப்படைந்து விடுகிறார்; இறைவன் அவரது பகைவனாக ஆகிவிடுகிறான்; அவர் இறைவனின் பகைவனாக ஆகி விடுகிறார்.

எனவேதான் ஷய்த்தானுக்கு ‘லயீன்’ (அதாவது சபிக்கப்பட்டவன்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இதே பெயரை மஸீஹிற்கு (அலைஹிஸ் ஸலாம் – அன்னார் மீது சாந்தி நிலவட்டுமாக) குறிப்பிட்டு, அவரது தூய ஒளிமயமான உள்ளத்தை ஷய்த்தானின் இருண்ட உள்ளத்துடன் ஒப்பீடு செய்வதும் (இறைவன் காப்பானாக), கிறித்தவ மக்களின் கொள்கைப்படி, இறைவன் புறமிருந்து வந்தவரும், ஒளியின் முழு உருவமாகத் திகழ்பவரும், பரலோகத்திலிருந்து வந்தவரும், அறிவின் நுழைவாயிலாக இருப்பவரும், இறைஞானத்தின் வழியாகவும், இறைவனின் வாரிசாகவும் இருக்கும் அப்படிப்பட்ட ஒருவர் சபிக்கப்பட்டவராகி விடுகிறார். இறைவன் காப்பானாக. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், அவர் இறைவனால் நிராகரிக்கப்பட்டுள்ளார்; இறைவனின் எதிரியாக மாறியுள்ளார்; அவரது உள்ளம் இருளாகி மாறிவிட்டது. அவர் இறைவனின் பாதையை விட்டு விலகி இறை ஞானத்திலிருந்து குருடராகி ஷய்த்தானின் வாரிசாகி விட்டார். ஷய்த்தானைக் குறிப்பிடும் அடைமொழியாகிய ‘சபிக்கப்பட்டவன்’ என்ற நிலைக்கு உரியவராகி விட்டார் எனக் கற்பனையாகக் கருதினாலும் கூட, இவையெல்லாம் எப்படிப்பட்ட நம்பிக்கை எனில், இதைக் கேட்டு

நமது இதயம் நொறுங்கி விடுகின்றது; உடல் நடுங்குகின்றது. இறைவனின் மஸீஹின் உள்ளம் ஷய்த்தானின் உள்ளத்தைப் போன்று இறை வெறுப்புடையதாக மாறிவிட்டதா?

இறைவனின் தூய மஸீஹ் இறைவனை விட்டு வெறுப்படைந்து உண்மையில் இறைவனின் எதிரியாக மாறிய ஒரு காலமும் அவருக்கு வந்ததா என்ன? இது ஒரு பெரிய தவறும் மாபெரும் அவமரியாதையுமாகும். இதனால் வானமும் வெடித்துச் சிதறுண்டு போகலாம்.

சுருங்கக்கூறின், ஜிஹாதைப் பற்றிய முஸ்லிம்களின் நம்பிக்கை மனித இனத்திற்கு கேடு விளைவிக்கும் எண்ணத்தைப் போன்றே கிறித்தவர்களின் இந்தக் கொள்கை இறைவனுக்கு எதிராக படுபாதகமான எண்ணத்தைக் கொண்டிருக்கிறது. ஒளி இருக்கும் இடத்தில் இருளும் இருப்பதற்குச் சாத்தியம் உண்டெனில், ஒரு கட்டத்தில் மஸீஹின் உள்ளத்தில் சாபத்தின் நச்சுத்தன்மை நுழைந்திருக்க வேண்டும் என்பதும் சாத்தியமாகும். (இவ்வாறு கூறுவதிலிருந்து இறைவன் நம்மைக் காப்பானாக) மானுடத்தின் இரட்சிப்பு, இப்படியொரு அவமதிப்பைச் சார்ந்து தான் இருக்க வேண்டுமெனில், இத்தகைய இரட்சிப்பை எவரும் பெறாமலேயே இருப்பது மிகச் சிறந்ததாகும். மஸீஹைப் போன்ற ஒளியை, ஒளியைக் கொண்டவரை வழிகேடு, சாபம் எனும் இருளின் பிடியினால் இறைவனுடைய பகைமையின் குழியில் வீழ்ந்து விட்டார் என்று குறிப்பிடுவதைவிட பாவத்திற்குரியோர் அனைவரும் மரணிப்பது இன்னும் சிறந்ததாகவே இருக்கும்.

எனவே, முஸ்லிம்களின் அந்தக் கொள்கையிலும், கிறித்தவர்களின் இந்தக் கொள்கையிலும் சீர்திருத்தத்தைக் கொண்டுவர நான் கடும் முயற்சிகள் எடுத்து வருகிறேன். புகழுக்குரிய இறைவன் எனது இந்த இரண்டு எண்ணங்களிலும் எனக்கு வெற்றியை வழங்கியதற்காக நான் நன்றிக்கடன் பட்டவனாக இருக்கிறேன். விண்ணின் அடையாளங்களும் இறை அற்புதங்களும் என்னுடன் இருப்பதால், முஸ்லிம்கள் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள வைப்பதில் நான் அதிக துன்பத்தை எதிர்கொள்ள வேண்டியது ஏற்படவில்லை. அற்புதமான, வழக்கத்திற்கு அப்பாற்பட்ட இறை அடையாளங்களைக் கண்ணுற்று, ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் என்னை ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்களது உள்ளத்தில் மிருகத்தனமான முறையில் குடிகொண்டிருந்த அந்த ஆபத்தான கொள்கைகளை அவர்கள் இப்போது விட்டு விட்டனர். எனது ஜமாஅத்தில் இணைந்தவர்கள் இந்த ஆட்சியின் உண்மையான நலன் விரும்பிகளாக ஆகி விட்டனர். அவர்கள் பிரிட்டிஷ் இந்தியாவுக்குக் கட்டுப்படும் பேரார்வத்தை உள்ளத்தில் முதல் தரமாகக் கொண்டிருக்கின்றனர் என்பதை எண்ணி நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கிறித்தவர்களிடமிருந்து இந்தத் தவறான கொள்கையை அகற்றுவதற்கு இறைவன் எனக்களித்த உதவிக்கு நன்றி தெரிவிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், மஸீஹ் (அலைஹிஸ் ஸலாம் – அன்னார் மீது சாந்தி நிலவட்டுமாக) சிலுவையில் மரணிக்கவில்லை என்பது ஏராளமான தீர்க்கமான சான்றுகள்

மூலமும், உறுதியான பகுத்தறிவு சான்றுகள் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளன. மாறாக, இறைவன் அந்த தூய நபியை சிலுவையிலிருந்து காப்பாற்றி விட்டான். பைபிளில் பதிவாகியுள்ள அவரது வாக்குமூலத்திற்கிணங்க மேலான இறைவனின் கருணையால், மரணிக்காமல் மயக்க நிலையில் இருக்கும்போதே அவர் உயிருடன் கல்லறைக்குள் வைக்கப்பட்டார். பின்னர் உயிருடனேயே கல்லறையை விட்டு வெளியே வந்தார். யூனுஸ் நபியின் அற்புதத்தை நான் காண்பிப்பேன் என்ற சொற்கள் இஞ்சீலில் இருக்கின்றன. ஆகவே அன்னார் இந்த அற்புதத்தை செய்து காட்டினார்கள். உயிருடனேயே கல்லறைக்குள் நுழைந்து உயிருடனேயே வெளியே வந்தார்கள்.[1] இந்த உண்மைகளைத் தான் நாம் பைபிளிலிருந்து அறிந்து கொள்கிறோம். ஆனால் அது மட்டுமின்றி ஹஸ்ரத் ஈஸா (இயேசு) நபியின் (அலைஹிஸ்ஸலாம் – அன்னாரின் மீது சாந்தி நிலவட்டுமாக) கல்லறை காஷ்மீரில் ஸ்ரீநகரில் அமைந்துள்ளது என்ற மிகப்பெரும் நற்செய்தியையும் நாம் பெற்றுள்ளோம். இது ஆணித்தரமான சான்றுகள் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர் யூதர்களின் நாட்டை விட்டோடி நுஸைபீன் (Nusaybin) வழியாக ஆப்கானிஸ்தான் வந்தடைந்தார் என்றும் நிரூபணமாகி உள்ளது. சில காலங்கள் அவர் கோஹே நுஃமான் –இல் தங்கிய பிறகு, காஷ்மீரில் நிரந்தரமாக தஞ்சம் புகுந்தார். அவர் 120 வயது வரை வாழ்ந்து, ஸ்ரீநகரில் மரணித்தார். அவரது கல்லறை ஸ்ரீநகரிலுள்ள கான்யார் வீதியில் இருக்கின்றது. இந்த விஷயம் தொடர்பாக நான் ‘மஸீஹ் ஹிந்துஸ்தான் மே’ (இந்தியாவில் இயேசு) என்ற தலைப்பில் ஒரு புத்தகம்

1. மத்தேயு 12:39 காண்க - வெளியீட்டாளர்.

எழுதியுள்ளேன். இது எனக்குக் கிடைத்துள்ள மாபெரும் வெற்றியாகும்.

நீண்ட காலமாக பிரிந்திருக்கும் முஸ்லிம்கள் கிறித்தவர்கள் ஆகிய மதிப்புக்குரிய இரு பெரும் சமூகத்தினரும் விரைவிலோ தாமதமாகவோ ஒருவருக்கொருவர் நெருங்கிய நண்பர்களாக ஆவதன் மூலம் இது நிகழும் என்பதை நான் அறிவேன். பல்வேறு சர்ச்சைகளுக்கு விடை கொடுத்து அவர்கள் அன்பிலும் நட்பிலும் ஒன்றிணைய முன்வருவர். இது விண்ணில் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாக இருப்பதனால், நமது ஆங்கிலேய அரசாங்கத்திற்கும் சமுதாயங்களின் ஒற்றுமையின் பக்கம் கவனம் ஏற்பட்டு விட்டது என்பது 'தேசத் துரோக சட்டத்தின்' பல்வேறு விதிமுறைகளிலிருந்தும் நிரூபணமாகிறது. இதில் அடங்கியுள்ள இரகசியம் என்னவெனில், மேன்மைக்குரிய இறைவனால் விண்ணில் செய்யப்படும் ஒவ்வொரு ஏற்பாடும் உலகியல் அரசாங்கத்தின் உள்ளத்தில் அதே சிந்தனைகளை ஏற்படுத்தத் துவங்கி விடுகிறது. சுருக்கமாக, மாட்சிமைமிகு மகாராணி அவர்களின் நல்லெண்ணத்தின் காரணமாக, மேன்மைக்குரிய இறைவன் உருவாக்கியுள்ள வழிமுறைகள் கிறித்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய இரண்டு சமுதாயங்களுக்கிடையே எப்படியொரு ஒற்றுமைக்கு புடம்போடுமெனில், அதன் பிறகு அவர்கள் இரு தனித்த பிரிவினர்களாக கருதப்பட மாட்டார்கள்.

இதன் பிறகு சிந்திக்கின்ற எந்த ஒரு மனிதனும் மஸீஹ் (அலை) அவர்கள் (அன்னார் மீது சாந்தி நிலவட்டுமாக) குறித்து, ஏதாவதொரு நேரத்தில் அவரது உள்ளத்தில் சாபத்தின்

நச்சுத்தன்மை புகுத்தப்பட்டவராக (இறைவன் காப்பானாக) எண்ண மாட்டார். ஏனெனில், சிலுவையில் அறைந்து கொல்லப்படுவதன் விளைவு சாபமாகும். எனவே சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டது நிரூபிக்கப்படவில்லை. மாறாக, இரவு முழுவதும் (கெத்செமனே) தோட்டத்தில் அன்னார் மன்றாடிய பிரார்த்தனை[2]–களின் அருளினால், அப்போது மஸீஹ் (அலை) அவர்களைக் (அன்னார் மீது சாந்தி நிலவட்டுமாக) காப்பாற்றுவதற்கு பரிந்துரை செய்து பொந்தியு பிலாத்துவின் மனைவிக்கு கனவில் காட்சியளித்ததை[3] வானவர்களின் விருப்பம் வெளிப்படுத்து–கின்றது.[4] மேலும், யூனுஸ் நபி (யோனா), மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் உயிரோடிருந்த நிகழ்வின்[5] ஒப்புமையை மஸீஹ் அவர்களே

2. மத்தேயு 26:39; மாற்கு 16:34; லுக்கா 22:42 காண்க - வெளியீட்டாளர்.

3. மத்தேயு 27:19 காண்க - வெளியீட்டாளர்.

4. ஈசா மஸீஹ் அவர்களுக்கு சிலுவைத் தண்டனை கொடுக்க வேண்டும் என்பது இறைவனின் உறுதியான எண்ணமாக இருந்து, ஆனால் அவனது மலக்கு தேவையில்லாமல் மஸீஹை விடுவிப்பதற்காக துடித்துக் கொண்டிருப்பதும், சில நேரத்தில் பிலாத்துவின் உள்ளத்தில் மஸீஹைப் பற்றிய நேசத்தை உருவாக்கி, நான் இயேசுவிடத்தில் எந்தப் பாவத்தையும் காணவில்லை (யோவான் 19:6; லூக்கா 23:4 காண்க) என்று கூறுவதும், (அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி, நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்கு சொப்பனத்தில் வெகு பாடு பட்டேன் என்று சொல்லி அனுப்பினாள் - மத்தேயு 27:19 காண்க) என்பதற்கேற்ப பிலாத்துவின் மனைவிக்கு கனவு வருவதும், இயேசு மஸீஹுக்கு சிலுவைத் தண்டனை கிடைத்து விட்டால் அதில் உமக்கு நல்லதல்ல என்று அவர் மனைவி கூறுவதும் ஆகிய இவையெல்லாம் எத்தகைய வியப்பான விஷயமாகும்! மலக்கு இறைவனுடன் கருத்து வேறுபாடு கொள்வது என்பது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல; மேலும் எந்த அறிவுள்ளவரின் மனசாட்சியும் இதை ஒப்புக் கொள்ளாது - நூலாசிரியர்.

5. மத்தேயு 12:39,40 காண்க - வெளியீட்டாளர்.

வழங்கியுள்ளதன் அடிப்படையில், அது தம்முடைய நிலைக்கு ஓர் உதாரணமாக இருப்பது, மேன்மைக்குரிய இறைவன் சாபத்திற்குரிய சிலுவை மரணத்தில் இருந்து அவரைக் காப்பாற்றினான் என்பதை நிரூபிக்கின்றது. 'ஏலி ஏலி லாமா சபக்தானி' (என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?[6] என்ற அன்னாரது துயரமிகு மன்றாடுதலை இறைவன் செவியேற்றான். இது உண்மையைத் தேடும் ஒவ்வொருவரின் உள்ளத்தையும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்க வைக்கும் மிகவும் தெளிவான ஒரு சான்றாக இருக்கிறது. இவ்வாறு ஏறக்குறைய 1900 வருட காலமாக இருந்து வந்த வீணான அவதூறிலிருந்து மஸீஹ் (அலை) அவர்களின் (அன்னார் மீது சாந்தி நிலவட்டுமாக) பெயரைத் தூய்மைப்படுத்தியுள்ளது என்பது சந்தேகத்திற்கிடமின்றி இந்தியாவின் பேரரசி மாட்சிமைமிகு மகாராணி அவர்களுக்கு வழங்கப்பட்ட அருட்களின் கனியாகும்.

இந்த எளிய சமர்ப்பிப்பை மேலும் நீடிப்பதை பொருத்தமென நான் கருதவில்லை. எனது உள்ளத்தில் இருக்கின்ற பேரார்வத்தின் அளவுக்கு எனது கலப்பற்றதன்மை, கட்டுப்படுதல், நன்றியுடைமை ஆகியவற்றை இந்தியாவின் மகாராணி (உங்கள் ஆட்சியை நீட்டிப்பானாக) அவர்களுக்கு என்னால் முழுமையாக தெரிவிக்க முடியவில்லை என்பதை உணர்கிறேன். வேறு உதவியற்ற நிலையில், பிரார்த்தனையுடன் நான் நிறைவு செய்கிறேன். வானங்கள் பூமியின் அதிபதியாக இருப்பவனும், நற்செயல்களுக்கு அழகிய வெகுமதியளிப்பவனுமாகிய மேன்மைக்குரிய அல்லாஹ், பேருதவி செய்யும் இந்த மகாராணி (உங்கள் ஆட்சியை நீடிக்கச் செய்வானாக) அவர்களுக்கு எம் சார்பாக அழகிய வெகுமதியை

6. மத்தேயு 27:46; மாற்கு 15:34 - வெளியீட்டாளர்.

வழங்குவானாக. அவர்களுக்கு விண்ணிலிருந்து உதவி புரிவானாக. அவர்களின் ஆட்சி நீடிக்கட்டுமாக. அவர்கள் மீது காட்டப்படும் கருணை இவ்வுலகத்திற்கு மட்டும் இருந்து விடாமல், அவர்களது உண்மையான நிரந்தரமான வளமான மறுமை வாழ்விற்கும் அருள்புரிவானாக. இறைவன் அவர்களை மகிழ்வோடு இருக்கச் செய்வானாக. அவர்கள் நிரந்தர மகிழ்ச்சியைப் பெறும் வழிவகைகளை அவர்களுக்கு வழங்குவானாக. மனித இனத்தின் மீது மிகுந்த கருணையுடன் நடந்து கொள்ளும் அருளுக்குரிய மகாராணி அவர்களின் உள்ளத்தில், மின்னலைப் போன்று பாய்ந்து உள்ளம் முழுவதையும் ஒளிமயமாக்கி மேலான சிந்தனைகளாக மாற்றி விடுகின்ற இறை முன்னறிவிப்பைக் கொண்டு, அவர்களின் இதயத்தை பிரகாசிக்கச் செய்யுமாறு இறைவன் தனது வானவர்களுக்கு கட்டளையிடுவானாக. இறைவா! எங்களது இந்தியப் பேரரசி அவர்களை எப்போதும் எல்லா விஷயத்திலும் மகிழ்ச்சியோடு வைப்பாயாக. உனது மாபெரும் வல்லமை நிரந்தரமான உனது ஒளியை நோக்கி அவர்களை ஈர்த்துக் கொண்டு வரட்டுமாக. நிரந்தரமான என்றும் அழியாத மகிழ்ச்சியின் உறைவிடத்தில் அவர்களை நுழையச் செய்வாயாக. உன்னால் இயலாதது எதுவுமில்லை. அனைவரும் 'ஆமீன்' எனக் கூறுவோம்.

சமர்ப்பிக்கும் இந்த எளியவன்
**மிர்ஸா குலாம் அஹ்மது**
குர்தாஸ்பூர் மாவட்டம்
காதியான் – பஞ்சாப்
20 ஆகஸ்டு 1899